READ MORE MODEL QUESTIONS - WWW.WINMEEN.COM

வணக்கம் நண்பர்களே...

இந்தப்பகுதி முழுக்க முழுக்க தமிழ் - செய்யுள் பகுதிக்காக மட்டுமே தயாரிக்கப்பட்டது. முதற்கட்டமாக 6 வது வகுப்பு சமச்சீர் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள அனைத்து செய்யுள் பகுதியையும் கீழ்க்கண்டவாறு வினா - விடை பகுதியாக தொகுத்து வழங்கியுள்ளேன்.

இது முற்றிலும் சமச்சீர் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்ட கேள்விகள் அடங்கிய தொகுப்பாகும். ஒரு சில வினாக்கள் மட்டும் புத்தகத்தை தாண்டி வெளியில் இருந்து எடுக்கப்பட்டவை. எனவே முதலில் நீங்கள் பாடப்புத்தகத்தை படித்து முடித்த பிறகு இந்தப்பகுதியில் உள்ள வினாக்களுக்கு பதில் அளித்து பழகுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆறாவது தமிழ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள்:

1) வாழ்த்துப்பகுதி
2) திருக்குறள்
3) நாலடியார்
4) பாரததேசம்
5) நான்மணிக்கடிகை
6) இசையமுது
7) பழமொழி நானூறு
8) சித்தர் பாடல்
9) புறநானூறு
10) திண்ணையை இடித்து தெருவாக்கு
11) செய்யும் தொழிலே தெய்வம்
12) தனிப்பாடல்
13) அந்தக்காலம் இந்தக்காலம்
14) திருக்குற்றாலக் குறவஞ்சி
15) மரமும் குடையும்

அனைவரும் அனைத்து வினாக்களுக்கும் பதில் அளித்து பழகி வெற்றிப்பெற என் வாழ்த்துக்கள்

இப்படிக்கு

மீண்டும் உங்கள் ஆதரவுடன்

கோ.பழனி முருகன்

## ஆறாவது வகுப்பு தமிழ் - செய்யுள்

### 1) வாழ்த்துப் பாடல் - இராமலிங்க அடிகளார்

1) கீழ்க்கண்டவற்றில் இராமலிங்க அடிகளாரின் சிறப்பு பெயர்களில் தவறானது எது?

A] திருவருட்பிரகாச வள்ளலார்

B] புரட்சித்துறவி

C] தெய்வப்புலவர்

D] புதுநெறிகண்ட புலவர்

2) இராமலிங்க அடிகளாரின் பிறந்த ஊர் எது?

A] வடலூர்

B] கூடலூர்

C] மருதவூர்

D] மருதூர்

3) இராமலிங்க அடிகளார் இயற்றிய நூல்களில் சரியானது எது?

A] ஜீவகாருண்ய ஒழுக்கம்

B] மனுமுறைகண்ட வாசகம்

C] எழுத்தறியும் பெருமான் மாலை

D] இவை அனைத்தும்

4) கீழ்க்கண்டவற்றில் இராமலிங்க அடிகளார் பதிப்பித்த நூல்களில் தவறானது எது?

A] வடிவுடைமாணிக்க மாலை

B] தொண்மண்டல சதகம்

C] ஒழுவிலொடுக்கம்

D] சின்மயதீபிகை

5) இராமலிங்க அடிகளார் கந்தக்கோட்டத்து இறைவன் மீது பாடிய பாடல்கள் அனைத்தும் கீழ்க்கண்ட எந்த பெயரில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது?

A] வடிவுடைமாணிக்க மாலை

B] எழுத்தறியும் பெருமான் மாலை

C] திருவருட்பா

D] மனுமுறை கண்ட வாசகம்

6) இராமலிங்க அடிகளார் திருவொற்றியூர் சிவபெருமான் மீது பாடிய பாடல்கள் அனைத்தும் கீழ்க்கண்ட எந்த பெயரில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது?

A] வடிவுடைமாணிக்க மாலை

B] எழுத்தறியும் பெருமான் மாலை

C] சின்மயதீபிகை

D] தொண்டமண்டலசதகம்

7) கீழ்க்கண்ட யாருடைய பாடல்கள் 'இறைவன் அருள் பெற்ற பாடல்கள்' என கூறப்படுகிறது?

A] பிள்ளை பெருமாள் அய்யங்கார்

B] நம்மாழ்வார்

C] வள்ளலார்

D] வள்ளுவர்

8) வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடிய கருணை மனமானது கீழ்க்கண்ட எந்த புலவருடையது?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] வாணிதாசன்

D] வள்ளலார்

9) கருணை நிறைந்த இறைவன் என் கண்ணில் இருக்கிறான் என தொடங்கும் பாடலை இயற்றிய புலவர் யார்?

A] சபாபதி முதலியார்

B] இராமலிங்க அடிகளார்

C] பாரதியார்

D] மீனாட்சி சுந்தரம் பிள்ளை

10) இராமலிங்க அடிகளாரின் பாடல்கள் அனைத்தும் கீழ்க்கண்ட எந்த தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன?

A] ஜீவகாருண்ய ஒழுக்கம்

B] எழுத்தறியும் பெருமான் மாலை

C] திருவருட்பா

D] மனுமுறை கண்ட வாசகம்

11) இராமலிங்க அடிகளாரின் ஆசிரியர் பெயர் யாது?

A] காஞ்சி மகாவித்வான் சபாபதி

B] வஞ்சி மகாவித்வான் சபாபதி

C] திகம்பர சாமிகள்

D] ஆறுமுக நாவலர்

12) வள்ளலார் அவர்கள் யார் வேண்டுகோளுக்கு இணங்க மனுமுறை கண்டவாசகம் என்ற நூலை எழுதினார்?

A] திருவொற்றியூர் சிவபெருமான்

B] கந்தகோட்டத்து இறைவன்

C] திகம்பர சாமிகள்

D] காஞ்சி மகாவித்வான் சபாபதி முதலியார்

13) மனுமுறைகண்ட வாசகம் என்ற நூலானது கீழ்க்கண்ட யாருடைய வரலாற்றை பற்றி கூறுகிறது?

A] கந்தகோட்டத்து இறைவன்

B] மனுநீதி சோழன்

C] திகம்பர சாமிகள்

D] திருவொற்றியூர் சிவபெருமான்

14) வள்ளலார் அவர்கள் எந்த ஆண்டு மக்களிடையே மதங்களின் நல்லிணக்கம் காண்பதற்கு 'சமரச சன்மார்க்க சங்கம்' ஒன்றை நிறுவினார்?

A] 1823

B] 1865

C] 1867

D] 1874

15) வள்ளலார் அவர்கள் எந்த ஆண்டு மக்களிடையே பசிப்பிணி போக்க 'தருமச்சாலை' ஒன்றை நிறுவினார்?

A] 1823

B] 1865

C] 1867

D] 1874

16) வள்ளலார் அவர்கள் எந்த ஆண்டு மக்களிடையே அறிவுநெறி விளங்க 'சத்தியஞான சபை' ஒன்றை நிறுவினார்?

A] 1823

B] 1865

C] 1867

D] 1872

17) வள்ளலார் அவர்களின் தாரக மந்திரம் யாது?

A] அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை

B] ஆன்மநேய ஒருமைப்பாடு

C] ஜீனகாருண்யம் அதுவே பேரின்ப வீட்டின் திறவுகோள்

D] கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்

18) இராமலிங்க அடிகளாரின் கோட்பாடு யாது?

A] அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை

B] ஆன்மநேய ஒருமைப்பாடு

C] ஜீனகாருண்யம் அதுவே பேரின்ப வீட்டின் திறவுகோள்

D] கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்

19) வள்ளலார் அவர்களின் கொள்கை யாது?

A] அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை

B] ஆன்மநேய ஒருமைப்பாடு

C] ஜீனகாருண்யம் அதுவே பேரின்ப வீட்டின் திறவுகோல்

D] கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்

20) வள்ளலாரை 'புதுநெறிகண்ட புலவர்' என்று பாராட்டிய புலவர் யார்?

A] சபாபதி முதலியார்

B] திகம்பரனார்

C] பாரதியார்

D] மீனாட்சி சுந்தரம் பிள்ளை

21) வள்ளலார் எழுதிய திருவருட்பா என்னும் தொகுப்பு நூலை மருட்பா என்று கூறியவர் யார்?

A] சபாபதி முதலியார்

B] க.சச்சினாந்தன்

C] பாரதியார்

D] ஆறுமுக நாவலர்

22) திருவருட்பா நூலின் நூல் அமைப்பு யாது?

A] 5 திருமுறைகள் - 5818 பாடல்கள்

B] 5 திருமுறைகள் - 5810 பாடல்கள்

C] 6 திருமுறைகள் - 5818 பாடல்கள்

D] 6 திருமுறைகள் - 5810 பாடல்கள்

23) வள்ளலார் அவர்கள் பிறப்பு இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1823 - 1874

B] 1820 - 1874

C] 1823 - 1872

D] 1820 - 1872

24) வள்ளலார் அவர்கள் சத்திய தருமச்சாலையில் மக்களுக்கு பசிப்பிணி போக்க அடுப்பு ஒன்றை எங்கு மூட்டினார்?

A] வடலூர்

B] கடலூர்

C] மருதவூர்

D] மருதூர்

25) ஒழிவிலொடுக்கம் என்ற நூலை வள்ளலார் பதிப்பித்த ஆண்டு?

A] 1834

B] 1874

C] 1851

D] 1865

26) மனுமுறை கண்ட வாசகம் என்ற நூலை வள்ளலார் அவர்கள் இயற்றிய ஆண்டு எது?

A] 1854

B] 1851

C] 1862

D] 1872

27) வள்ளலார் அவர்களின் முதல் ஐந்து திருமுறைகள் வெளியிடப்பட்ட ஆண்டு எது?

A] 1837

B] 1888

C] 1874

D] 1867

28) வள்ளலார் அவர்களின் ஆறாம் திருமுறையானது எப்பொழுது வெளியிடப்பட்டது?

A] 1854

B] 1888

C] 1851

D] 1865

29) வள்ளலார் பிறந்த எத்தனை நாள்களுக்கு பிறகு அவர் தன் தந்தையை இழந்தார்?

A] 120 நாள்கள்

B] 365 நாள்கள்

C] 180 நாள்கள்

D] 240 நாள்கள்

30) வள்ளலார் அவர்கள் தருமச்சாலையை அமைக்க வடலூரில் மொத்தம் எத்தனை காணி நிலத்தை பெற்றார்?

A] 80 காணி நிலம்

B] 50 காணி நிலம்

C] 100 காணி நிலம்

D] 75 காணி நிலம்

31) வள்ளலார் அவர்கள் ஒரே இரவில் மொத்தம் எத்தனை வரிகள் கொண்ட அருட்பெருஞ்சோதி அகவலை பாடி முடித்துள்ளார்?

A] 1590 வரிகள்

B] 1616 வரிகள்

C] 1596 வரிகள்

D] 1742 வரிகள்

32) திருவருட்பா நூலானது மொத்தம் எத்தனை பதிகங்களை கொண்டுள்ளது?

A] 356 பதிகங்கள்

B] 399 பதிகங்கள்

C] 388 பதிகங்கள்

D] 350 பதிகங்கள்

33) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்என் - என்னும் பாடலானது வள்ளலாரின் எந்த திருமுறையில் இடம்பெற்றுள்ளது?

A] முதலாம் திருமுறை

B] நான்காம் திருமுறை

C] ஐந்தாம் திருமுறை

D] ஆறாம் திருமுறை

34) கண்ணில் கலந்தான் - என தொடங்கும் பாடலானது எந்த தலைப்பில் இடம்பெற்றுள்ளது?

A] சுத்த சிவநிலை

B] இன்பத்திறன்

C] உலகப்பேறு

D] சிற்சித்தி துதி

விடைகள் - வாழ்த்துப்பாடல்:-

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 7 | C | 13 | B | 19 | C |
| 2 | D | 8 | D | 14 | B | 20 | C |
| 3 | D | 9 | B | 15 | C | 21 | D |
| 4 | A | 10 | C | 16 | D | 22 | C |
| 5 | A | 11 | A | 17 | A | 23 | A |
| 6 | B | 12 | D | 18 | B | 24 | A |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25 | C | 26 | A | 27 | D | 28 | B | 29 | C |
| 30 | A | 31 | C | 32 | B | 33 | D | 34 | A |

## 2) திருக்குறள் - திருவள்ளுவர்:-

1) புன்கணீர் என்பதன் பொருள் யாது?

A] இன்பம் கண்டு பெருகும் கண்ணீர்

B] துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்

C] அன்பு கண்டு பெருகும் கண்ணீர்

D] வெறுப்பை கண்டு பெருகும் கண்ணீர்

2) வழக்கு என்பதன் பொருள் யாது?

A] வாழ்க்கை

B] வாழ்க்கை நெறி

C] பிரச்சனை

D] எலும்பு

3) வீரத்திற்கு துணையாவது எது?

A] அன்பு

B] கோபம்

C] வாழ்க்கை நெறி

D] மகிழ்ச்சி

4) வன்பாற்கண் (பாலை நிலம்) என்பதை பிரித்து எழுதுக?

A] வன்பால் + கண்

B] வன்பாற் + கண்

C] வன் + பால் + கண்

D] வன் + பாற்கண்

5) திருவள்ளுவரின் வேறு பெயர்களில் தவறானது எது?

A] செந்நாப்போதார்

B] தெய்வப்புலவர்

C] நாயனார்

D] புரட்சித்துறவி

6) கீழ்க்கண்டவற்றில் எதைக் கொண்டு திருக்குறள் நூலானது சிறப்பு பெயராக கருதப்படுகிறது?

A] கருவியாகு பெயர்

B] அடையெடுத்த கருவியாகு பெயர்

C] இரட்டுற மொழிதல்

D] விற்பூட்டு பொருள்கோள்

7) கீழ்க்கண்டவற்றில் யாருடைய உரையானது திருக்குறள் நூலின் சிறந்த உரையாக கருதப்படுகிறது?

A] வீரமாமுனிவர்

B] ஜி.யூ.போப்

C] டாக்டர்.கிரால்

D] பரிமேலழகர்

8) திருக்குறளை பற்றி 'எப்பாவலரும் இயைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்தமொழி' என்று கூறியவர் யார்?

A] கல்லாடர்

B] செங்கண்ணார்

C] நத்தத்தனார்

D] பிள்ளைபெருமால் அய்யங்கார்

9) திருக்குறளை பற்றி 'ஓதற்கு எளியதாய், உணர்வதற்கு அரியதாகி, வேதப்பொருளாய் மிக விளங்கி' என்று கூறியவர் யார்?

A] கல்லாடர்

B] செங்கண்ணார்

C] நத்தத்தனார்

D] பிள்ளைபெருமால் அய்யங்கார்

10) திருக்குறளை பற்றி 'இந்நூலை முற்றிலும் ஓதியபின் வேறுநூல் பயிற்சி வேண்டா, மண்ணுதமிழ்ப் புலவராய் வீற்றிருக்கலாம்' என்று கூறியவர் யார்?

A] கல்லாடர்

B] செங்கண்ணார்

C] நத்தத்தனார்

D] பிள்ளைபெருமால் அய்யங்கார்

11) திருக்குறளானது இதுவரை எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?

A] 105

B] 108

C] 104

D] 107

12) திருக்குறளை சிங்கள மொழியில் மொழி பெயர்த்த கவிஞர் யார்?

A] வீரமாமுனிவர்

B] மிசகாமி அம்மையார்

C] க.சச்சினாந்தன்

D] திவான் பகதூர் கோவிந்தபிள்ளை

13) திருவள்ளுவர் ஆண்டை கி.மு 31 உடன் கணக்கிட்டு கூறியவர் யார்?

A] பரிமேலழகர்

B] பாரதியார்

C] மறைமலையடிகள்

D] பாரதிதாசன்

14) 'வள்ளுவனை பெற்றதால் புகழ் வையகமே' - என்று திருவள்ளுவரை புகழ்ந்தவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] ஜி.யூ.போப்

D] பரிமேலழகர்

15) ஞானப்பிரகாசம் அவர்கள் முதன் முதலில் திருக்குறளை பதிப்பித்து வெளியிட்ட ஆண்டு எது?

A] 1819

B] 1815

C] 1818

D] 1812

READ MORE MODEL QUESTIONS - WWW.WINMEEN.COM

16) ஞானப்பிரகாசம் அவர்கள் முதன் முதலில் திருக்குறளை பதிப்பித்து வெளியிட்ட இடம் எது?

A] மதுரை

B] கோவை

C] தஞ்சை

D] நெல்லை

17) 'அடுத்த பிறவியில் தமிழனாகப் பிறந்து தமிழ்மொழியில் திருக்குறளை கற்க வேண்டும்' - என்று திருக்குறளின் பெருமையை கூறியவர் யார்?

A] அம்பேத்கர்

B] இரசூல்கம்சதேவ்

C] ஜான் ரஸ்கின்

D] காந்தி

18) தற்போதைய (2017 ஆண்டின்) திருவள்ளுவர் ஆண்டு யாது?

A] 2016

B] 2035

C] 2048

D] 2040

19) 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' - என்று திருவள்ளுவரை புகழ்ந்தவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] ஜி.யூ.போப்

D] பரிமேலழகர்

20) ‘அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை __________’- அடுத்த வரியை நிரப்புக?

A] வன்பாற்கன்

B] வன்பால்கண்

C] வற்பாற்கன்

D] வன்பாற்கண்

21) அமர்ந்து, நாடி - ஆகிய சொற்கள் கீழ்க்கண்ட எந்த பொருளை குறிக்கின்றது?

A] விருப்பம்

B] விரும்பி

C] வஞ்சம்

D] வறுமை

22) துன்புறூஉம் _________ இல்லாகும் யார்மாட்டும் - என தொடங்கும் குறளில் விடுபட்ட எழுத்தை நிரப்புக?

A] இன்புறூஉம்

B] இன்சொல்

C] துவ்வாமை

D] உவ்வாமை

23) அல்லவை என்பதன் பொருள் யாது?

A] பாவம்

B] விருப்பம்

C] புண்ணியம்

D] மறுபிறவி

24) திருக்குறள் உரைகளில் பரிமேலழகரின் உரையே சிறந்தது என்று கூறிய புலவர் யார்?

A] பாரதியார்

B] நச்சர்

C] உமாபதி சிவாச்சாரியார்

D] தாமதத்தர்

25) உடம்பில் உயிர் இருப்பதற்கு அடையாளமாக திருவள்ளுவர் கீழ்க்கண்ட எந்த செயலை குறிப்பிடுகிறார்?

A] அன்பு செய்வது

B] நன்மை செய்வது

C] தீமை செய்வது

D] அமைதி காப்பது

விடைகள் - திருக்குறள்:-

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 7 | D | 13 | C | 19 | A |
| 2 | B | 8 | A | 14 | B | 20 | A |
| 3 | A | 9 | B | 15 | D | 21 | B |
| 4 | A | 10 | C | 16 | D | 22 | C |
| 5 | D | 11 | D | 17 | D | 23 | A |
| 6 | B | 12 | B | 18 | C | 24 | C |

| | |
|---|---|
| 25 | A |

## 3) நாலடியார் - சமணமுனிவர்கள்

1) நாலடியார் நூல்களில் உள்ள பாடல்கள் கீழ்க்கண்ட யாருடைய பாடல்களின் தொகுப்பாகும்?

A] சைவர்கள்

B] வைணவர்கள்

C] சமண முனிவர்கள்

D] பதுமனார்

2) சாம வேதம் மற்றும் வேளாண் வேதம் - என்று அழைக்கப்படும் நூல் எது?

A] திருக்குறள்

B] நாலடியார்

C] திருவருட்பா

D] எட்டுத்தொகை

3) வேளாண் வேதத்திற்கு கடவுள் வாழ்த்து எழுதிய புலவர் யார்?

A] பதுமனார்

B] பாரதம் பாடிய பெருந்தேவனார்

C] சமண முனிவர்கள்

D] கடவுள் வாழ்த்து இல்லை

4) நாலடியார் நூலின் நூல் அமைப்பு யாது?

A] அறத்துப்பால் - 10; பொருட்பால் - 24; காமத்துப்பால் - 6

B] அறத்துப்பால் - 10; பொருட்பால் - 27; காமத்துப்பால் - 3

C] அறத்துப்பால் - 13; பொருட்பால் - 23; காமத்துப்பால் - 4

D] அறத்துப்பால் - 13; பொருட்பால் - 24; காமத்துப்பால் - 3

5) 'நாய்க்கால் சிறுவிரல் போல் நன்கனிய ராயினும்' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] திருக்குறள்

B] நாலடியார்

C] எட்டுத்தொகை

D] ஆசாரக்கோவை

6) நாலடியார் நூலானது கீழ்க்கண்டவற்றில் எதனால் ஆனது?

A] நான்கு அடிகளை கொண்ட ஆசிரியப்பாக்கள்

B] இரண்டு அடிகளை கொண்ட வெண்பாக்கள்

C] நான்கு அடிகளை கொண்ட வெண்பாக்கள்

D] இரண்டு அடிகள் கொண்ட வெண்பாக்கள்

7) கீழ்க்கண்டவற்றில் எந்த பிரிவினை பற்றி நாலடியார் நூலானது அதிகம் கூறுகிறது?

A] முத்தரையர்

B] நாயக்கர்

C] கம்பளத்தார்

D] அம்பலகாரர்

8) நாலடியார் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

A] எல்லீஸ் துரை

B] கெல்லட்

C] வீரமாமுனிவர்

D] ஜி.யூ.போப்

9) நாலடியார் நூலை தொகுத்து அதிகாரம் வகுத்தவர் யார்?

A] தருமர்

B] பதுமனார்

C] சமணமுனிவர்கள்

D] ஜி.யூ.போப்

10) நாலடியார் நூலை முப்பாலாக பகுத்தவர் யார்?

A] தருமர்

B] பதுமனார்

C] சமணமுனிவர்கள்

D] ஜி.யூ.போப்

11) நாலடியார் நூலானது மொத்தம் எத்தனை இயல்களை கொண்டது?

A] 9 இயல்கள்

B] 13 இயல்கள்

C] 15 இயல்கள்

D] 12 இயல்கள்

12) நாலடியார் நூலில் இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் மொத்தம் எத்தனை?

A] 80 அதிகாரங்கள்

B] 56 அதிகாரங்கள்

C] 40 அதிகாரங்கள்

D] 30 அதிகாரங்கள்

13) பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஒரே தொகை நூல் எது?

A] களவழி நாற்பது

B] நாலடியார்

C] கார் நாற்பது

D] நான்மணிக்கடிகை

விடைகள் - நாலடியார்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | B | 3 | A | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | A | 8 | D | 9 | B | 10 | A |
| 11 | D | 12 | C | 13 | B | | | | |

## 4) பாரத தேசம் - பாரதியார்

1) ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் - என்ற பாடலை பாடிய புலவர் யார்?

A] பாரதிதாசன்

B] அப்துல் ரகுமான்

C] பாரதியார்

D] ந.பிச்சமூர்த்தி

2) பாரதியார் அவர்கள் எத்தனை மாதங்கள் எங்கு ஆசிரியர் பணியை செய்தார்?

A] மதுரை சேபதி நடுநிலைப்பள்ளி - 3 மாதங்கள்

B] மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி - 3 மாதங்கள்

C] தஞ்சை சேதுபதி நடுநிலைப்பள்ளி - 3 மாதங்கள்

D] தஞ்சை சேதுபதி உயர்நிலைப்பள்ளி - 3 மாதங்கள்

3) பாரதியார் அவர்களின் முதல் உரைநடைக்காவியம் எது?

A] ஞானரதம்

B] பகவத் கீதை

C] பாஞ்சாலி சபதம்

D] தமிழியக்கம்

4) பாரதியாரின் மொழிப் பெயர்ப்பு நூல் எது?

A] ஞானரதம்

B] பகவத் கீதை

C] பாஞ்சாலி சபதம்

D] தமிழியக்கம்

5) பாரதியார் கீழ்க்கண்ட எந்த நூலுக்கு உரை விளக்கம் தந்துள்ளார்?

A] திருக்குறள்

B] பகவத்கீதை

C] பாஞ்சாலி சபதம்

D] பதஞ்சலி யோக சூத்திரம்

6) பக்கிம் சந்திர சாட்டர்ஜியின் வந்தே மாதரம் மற்றும் பகவத்கீதை ஆகிய நூல்களை பாரதியார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இதழில் மொழி பெயர்த்துள்ளார்?

A] சக்கரவர்த்தினி

B] பாலபாரதம்

C] இந்தியா

D] சுதேசிமித்ரன்

7) 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று பாரதியாரை புகழ்ந்தவர் யார்?

A] பாரதிதாசன்

B] திலகர்

C] கவிமணி

D] காந்தி

8) கேலி சித்திரம் என்னும் வரையும் முறையை தமிழுக்கு முதன் முதலில் தந்த கவிஞர் யார்?

A] பாரதிதாசன்

B] கவிமணி

C] பாரதியார்

D] நாமக்கல் கவிஞர்

9) பாரதியார் பெற்ற சிறப்பு பெயர்களில் தவறானது எது?

A] சக்திதாசன்

B] ஓர் உத்தம தேசபிமாணி

C] காளிதாசன்

D] கண்டெழுதுவான்

10) கனவு காண்பதில் பாரதிக்கு நிகராக போற்றப்படுபவர் யார்?

A] வ.உ.சிதம்பரனார்

B] பாரதிதாசன்

C] இராமலிங்க தேவர்

D] பாரதியார்

11) சாதிகள் இரண்டொழிய வேறில்லை எனக் கூறியவர் யார்?

A] பாரதியார்

B] ஔவையார்

C] திருவள்ளுவர்

D] நாமக்கல் கவிஞர்

12) கீழ்க்கண்டவற்றில் பாரதியார் கருத்துப்படி யாரை 'மற்றோர்' என குறிப்பிடப்படுபவர் யார்?

A] மேலோர்

B] கீழோர்

C] பிறர்க்கு உதவும் நேர்மை உடையவர்

D] பிறர்க்கு உதவும் நேர்மை அற்றோர்

13) பாரதியார் அவர்கள் கவி புனையும் ஆற்றல் பெற்ற வயது எது?

A] 05 வது வயது

B] 10 வது வயது

C] 16 வது வயது

D] 11 வது வயது

14) பாரதியார் எழுதிய உரைநடை நூல்களில் தவறானது எது?

A] ஞானரதம்

B] புதிய ஆத்திச்சூடி

C] சந்திரிகையின் கதை

D] தராசு

15) தமிழில் சுயசரிதை பாடிய முதல் கவிஞன் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] நாமக்கல் கவிஞர்

D] மீனாட்சி சுந்தரம் பிள்ளை

16) ஷெல்லிதாசன் - என்று தன்னை அழைத்துக் கொண்ட கவிஞர் யார்?

A] இரவீந்தரநாத் தாகூர்

B] பக்கிம்சந்திர சட்டர்ஜி

C] பாரதியார்

D] ஜீவா

17) பாரதியாரின் அரசியல் குருவாக திகழ்ந்தவர் யார்?

A] நேதாஜி

B] காந்தியடிகள்

C] சாரு நிவேதிதா

D] லோகமான்யர் திலகர்

18) பாரதியாரின் ஞானகுருவாக திகழ்ந்தவர் யார்?

A] லோகமான்ய திலகர்

B] இராமகிருஷ்ணர்

C] விவேகானந்தர்

D] சகோதிரி நிவேதிதா

19) பாரதியார் பணியாற்றிய வார இதழ்களில் தவறானது எது?

A] கர்மயோகி

B] பாலபாரதா

C] இந்தியா

D] சூர்யோதயம்

20) பாரதியாரின் நூல்கள் அனைத்தும் தமிழ்நாடு மாநில அரசினால் நாட்டுமையாக்கப்பட்ட ஆண்டு எது?

A] 1947

B] 1948

C] 1949

D] 1951

21) பாரதியாரின் பிறப்பு இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1882 - 1924

B] 1884 - 1920

C] 1888 - 1931

D] 1882 - 1921

22) கீழ்க்கண்ட எந்த ஆண்டில் பாரதியர் காசியில் சில காலம் தங்கியிருந்தார்?

A] 1898 - 1902

B] 1890 - 1900

C] 1898 - 1901

D] 1894 - 1903

23) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஆயுதங்கள் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் - எனத் தொடங்கும் வரியானது கீழ்க்கண்ட எந்த வரியில் தொடங்கும் பாடலின் ஒரு பகுதியாகும்?

A] எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி

B] வெள்ளிப் பனிமைலையின்மீது உலாவுவோம்

C] பொழுது புலர்ந்தது; யாம்செய்த தவத்தால்

D] பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்

24) ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் - எனத் தொடங்கும் வரிப்பாடலானது கீழ்க்கண்ட எந்த தலைப்பில் இடம் பெற்றுள்ளது?

A] பாரத நாடு

B] பாரத தேசம்

C] தேசிய கீதம்

D] பாரத தாய்

25) சக்கரவர்த்தினி என்னும் இதழனாது கீழ்க்கண்டவற்றில் எதை சேர்ந்தது?

A] மகளிர் அரையாண்டு இதழ்

B] மகளிர் தின இதழ்

C] மகளிர் வார இதழ்

D] மகளிர் மாத இதழ்

விடைகள் - பாரததேசம்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 5 | D | 9 | D | 13 | D | 17 | D |
| 2 | B | 6 | A | 10 | D | 14 | B | 18 | D |
| 3 | A | 7 | C | 11 | B | 15 | A | 19 | A |
| 4 | B | 8 | C | 12 | D | 16 | C | 20 | C |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21 | D | 22 | A | 23 | C | 24 | B | 25 | D |

5) நான்மணிக்கடிகை - விளம்பிநாகனார்:-

1) ஓதின் புகழ்சால் உணர்வு - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] புறநானூறு

B] அகநானூறு

C] நான்மணிக்கடிகை

D] நாலடியார்

2) கீழ்க்கண்ட எந்த நூலானது ‘துண்டு’ என்ற சிறப்பு பெயரை பெற்றுள்ளது?

A] நாலடியார்

B] திருக்குறள்

C] திரிகடுகம்

D] நான்மணிக்கடிகை

3) கீழ்க்கண்டவற்றில் கல்வி யாருக்கு விளக்காக கருதப்படுகிறது?

A] மடவார்

B] புதல்வர்கள்

C] நல்லெண்ணம்

D] குடும்பம்

4) விளம்பி என்பது யாது?

A] நூலாசிரியரின் ஊர்ப்பெயர்

B] நூலாசிரியரின் புனைபெயர்

C] நூலாசிரியரின் இயற்பெயர்

D] நூலாசிரியரின் துணைப்பெயர்

5) நான்மணிக்கடிகையில் உள்ள எந்த இரு பாடல்கள் மட்டும் ஜி.யூ.போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்?

A] 5 மற்றும் 250 வது பாடல்

B] 1 மற்றும் 108 வது பாடல்

C] 7 மற்றும் 100 வது பாடல்

D] 10 மற்றும் 25 வது பாடல்

6) குடும்பத்திற்கு விளக்காக கருதப்படுவது எது?

A] மடவார்

B] புதல்வர்கள்

C] நல்லெண்ணம்

D] குடும்பம்

விடைகள் - நான்மணிக்கடிகை:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | D | 3 | B | 4 | A | 5 | C |
| 6 | A | | | | | | | | |

6) இசையமுது - பாரதிதாசன்

1) பாரதிதாசனை புரட்சிக்கவி என்று அழைத்தவர் யார்?

A] பெரியார்

B] அண்ணா

C] பாரதியார்

D] திரு.வி.க

2) குடும்பக்கட்டுப்பாடு பற்றி முதன் முதலில் பாட்டெழுதிய முதல் கவிஞர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] வாணிதாசன்

D] திரு.வி.க

3) பாரதிதாசன் அவர்கள் ஒரே இரவில் எழுதிய நூல் எது?

A] இருண்ட வீடு

B] அழகின் சிரிப்பு

C] இசையமுது

D] தமிழியக்கம்

4) கல்லாத பெண்களின் இழிவைக் கூறும் பாரதிதாசனின் நூல் எது?

A] இருண்ட வீடு

B] அழகின் சிரிப்பு

C] இசையமுது

D] தமிழியக்கம்

5) கற்ற பெண்களின் சிறப்பைக் கூறும் பாரதிதாசனின் நூல் எது?

A] இருண்ட வீடு

B] குடும்ப விளக்கு

C] இசையமுது

D] தமிழியக்கம்

6) பாரதிதாசனின் எந்த நூலானது இயற்கையை வர்ணிக்கிறது என்று கூறப்படுகிறது?

A] இருண்ட வீடு

B] அழகின் சிரிப்பு

C] இசையமுது

D] பாண்டியன் பரிசு

7) பாரதிதசனின் நூல்களானது எந்த ஆண்டு பொதுவுடைமையாக்கப்பட்டது?

A] 1989

B] 1986

C] 1988

D] 1990

8) கீழ்க்கண்டவற்றில் பாரதிதாசனின் சிறப்பு பெயர்களில் தவறானது எது?

A] கண்டெழுதுவோன்

B] கிறுக்கன்

C] புரட்சிக்கவிஞர்

D] தெய்வக் கவிஞர்

9) பாரதிதாசன் எழுதிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] இருண்ட வீடு

B] கள்வனின் காதலி

C] இசையமுது

D] பாண்டியன் பரிசு

10) பாரதிதாசன் அவர்கள் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆசிரியரான வயது எது?

A] 16 வது அகவை

B] 17 வது அகவை

C] 18 வது அகவை

D] 19 வது அகவை

11) பாரதிதாசன் அவர்கள் புதுவையின் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு எது?

A] 1954

B] 1949

C] 1953

D] 1955

12) முதன் முதலாக பாரதிதாசன் அவர்கள் பாரதியார் முன்னிலையில் பாடிய பாட்டை பாரதியார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இதழுக்கு அனுப்பினார்?

A] சூர்யோதயம்

B] சுதேசிமித்ரன்

C] சக்கரவர்த்தினி

D] இந்தியா

13) பாரதிதாசன் இயற்றிய பிசிராந்தையார் நாடக நூலானது எந்த ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்றது?

A] 1954

B] 1960

C] 1965

D] 1969

14) பாரதிதாசன் எழுதிய குறுங்காவியங்களில் தவறான நூல் எது?

A] புரட்சிக்கவி

B] பாண்டியன் பரிசு

C] எதிர்பாராத முத்தம்

D] தமிழச்சியின் கத்தி

15) திருக்குறள் நூலுக்கு பாரதிதாசன் இயற்றிய உரைவிளக்க நூலின் பெயர் யாது?

A] திருக்குறள் உரை

B] வள்ளுவர் உள்ளம்

C] புதிய திருக்குறள்

D] வள்ளுவர் திரட்டு

16) மழையே மழையே வா வா - என்னும் தொடங்கும் பாடலானது இசையமுது என்னும் கீழ்க்கண்ட எந்த பகுதியில் அமைந்துள்ளது?

A] சிறுவர் பகுதி

B] பெண்கள் பகுதி

C] காதல் பகுதி

D] தமிழ்ப் பகுதி

17) பாரதிதாசன் அவர்கள் கி.பி.1909 ஆண்டு எந்த பகுதியில் ஆசிரியர் பணியாற்றினார்?

A] புதுச்சேரி

B] சிதம்பரம்

C] கடலூர்

D] காரைக்கால்

18) பாரதிதாசவை புட்சிக்கவிஞர் என்று போற்றியவர் யார்?

A] பெரியார்

B] அண்ணா

C] பாரதியார்

D] திரு.வி.க

19) சென்னை தபால் துறை மூலமாக எந்த ஆண்டின் போது பாரதிதாசனுக்கு ஒரு நினைவு அஞ்சல் தலையானது அவரது பெயரில் வெளியிடப்பட்டது?

A] 2000

B] 2002

C] 2001

D] 2005

20) பாரதிதாசனின் பிறப்பு இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1890 - 1964

B] 1891 - 1964

C] 1895 - 1963

D] 1891 - 1960

விடைகள் - இசையமுது:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 4 | A | 7 | D | 10 | C | 13 | D |
| 2 | B | 5 | B | 8 | D | 11 | A | 14 | B |
| 3 | D | 6 | C | 9 | B | 12 | B | 15 | B |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | A | 17 | D | 18 | A | 19 | C | 20 | B |

## 7) பழமொழி நானூறு - முன்றுறை அரையனார்:-

1) ஆற்றுண்ணா வேண்டுவது இல் - என்ற வரி கொண்ட பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] நாலடியார்

B] குற்றால குறவஞ்சி

C] புறநானூறு

D] பழமொழி நானூறு

2) 'கட்டுச்சோறு' - என்பது கீழ்க்கண்ட எந்த காலத்தின் பெயர் ஆகும்?

A] முக்காலம்

B] இடைக்காலம்

C] இந்தக்காலம்

D] இவற்றில் ஏதும் இல்லை

3) நாலடியாருக்கு இணையான நூல் என அழைக்கப்படும் நூல் எது?

A] திருக்குறள்

B] பழமொழி நானூறு

C] ஆசாரக்கோவை

D] முதுமொழிக்காஞ்சி

4) பழமொழி நானூறு - நூலில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் மொத்தம் எத்தனை?

A] 40

B] 100

C] 400

D] 200

5) ஆற்றுண்ணா வேண்டுவது இல் - என முடியும் பாடலானது கீழ்க்கண்ட எதன் சிறப்பை விளக்கிறது?

A] கல்வியின் சிறப்பை

B] உணவின் சிறப்பை

C] அறிவுடையார் சிறப்பை

D] புகழின் சிறப்பை

6) பழமொழி நானூறு நூலில் உள்ள பாடல்களில் ஒவ்வொரு பாடலின் எத்தனையாவது அடியானது பழமொழி கொண்டு அமைகிறது?

A] முதல் அடி

B] நான்காம் அடி

C] மூன்றாம் அடி

D] இறுதி சீர்

7) பழமொழி நானூறு நூலில் இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் மொத்தம் எத்தனை?

A] 34

B] 44

C] 30

D] 40

8) தொல்காப்பியர் அவர்கள் பழமொழி என்ற சொல்லை கீழ்க்கண்டவற்றில் எவ்வாறாக கூறுகிறார்?

A] பழமொழி

B] பழையசொல்

C] முதுசொல்

D] முதுமொழி

9) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் வரலாற்றை மிகுதியாக கூறும் நூல் எது?

A] இனியவை நாற்பது

B] கார் நாற்பது

C] சிறுபஞ்சமூலம்

D] பழமொழி நானூறு

10) ஆற்றவும் கற்றார் அறிவுடையார் - என தொடங்கும் பாடலானது பழமொழி நானூறு நூலில் கீழ்க்கண்ட எந்த தலைப்பில் உள்ள தொகுப்பில் அமைந்துள்ளது?

A] அறிவுடைமை

B] கல்வி

C] கல்லாதார்

D] அவையறிதல்

விடைகள் - பழமொழி நானூறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | D | 3 | B | 5 | A |
| 2 | C | 4 | C | 6 | B |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | A | 8 | C | 9 | D | 10 | B |

## 8) சித்தர் பாடல் - கடுவெளி சித்தர்:-

1) இந்த உலகத்தில் எல்லாம் பொய்யாகப் போனாலும் நீ பொய் சொல்லாதே - என்று கூறியவர் யார்?

A] காந்தி

B] பாரதியார்

C] கடுவெளிச் சித்தர்

D] திரு.வி.க

2) 'பெண்களை பழித்து பேசாதே!' - என்று கூறிய புலவர் யார்?

A] வல்லிக்கண்ணன்

B] பாரதிதாசன்

C] பெரியார்

D] கடுவெளி சித்தர்

3) ஏறத்தாழ எத்தனை ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் காடு மலைகளில் சித்தர்கள் வாழ்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது?

A] 400 ஆண்டுகள்

B] 300 ஆண்டுகள்

C] 200 ஆண்டுகள்

D] 250 ஆண்டுகள்

4) பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுணிச் சித்தர் ஆகிய பெயர்கள் எல்லாம் கீழ்க்கண்ட எந்த வகையைச் சேர்ந்தவை?

A] காரணப்பொதுப் பெயர்

B] காரண சிறப்பு பெயர்

C] இடுகுறி சிறப்பு பெயர்

D] காரணப் பெயர்கள்

5) உருவ வழிபாடு செய்யாமல் வெட்டவெளியையே கடவுளாக வழிபட்டவர் யார்?

A] பாம்பாட்டிச் சித்தர்

B] குதம்பைச் சித்தர்

C] அழுகுணிச் சித்தர்

D] கடுவெளிச் சித்தர்

6) கீழ்க்கண்ட சித்தர்களில் எளிய சொற்களில் அறிவுரைகளைக் கூறியவர் யார்?

A] கடுவெளிச் சித்தர்

B] குதம்பைச் சித்தர்

C] அழுகுணிச் சித்தர்

D] பாம்பாட்டிச் சித்தர்

7) கடம் - என்பதன் பொருள் யாது?

A] இறுமாப்பு

B] கசப்பான சொற்கள்

C] உடம்பு

D] தண்ணீர்

8) கடுவெளிச் சித்தர் பாடிய பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 50

B] 53

C] 54

D] 55

READ MORE MODEL QUESTIONS - WWW.WINMEEN.COM

விடைகள் - சித்தர் பாடல்கள்:-

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 3 | A | 5 | D | 7 | C |
| 2 | D | 4 | D | 6 | A | 8 | C |

9) புறநானூறு - ஔவையார்:-

1) நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ - என தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] புறநானூறு

B] அகநானூறு

C] முதுமொழிக்காஞ்சி

D] களவழி நாற்பது

2) எவ்வழி நல்லவர் ஆடவர் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள ஆடவர் என்ற சொல்லானது பொதுவாக கீழ்க்கண்டவற்றில் யாரை குறிக்கிறது?

A] ஆண்கள்

B] இளைஞர்கள்

C] குழந்தைகள்

D] மனிதர்கள்

3) கீழ்க்கண்டவற்றில் இடம் பெற்றுள்ள சங்க நூல்களில் தவறானது எது?

A] நற்றிணை

B] பரிபாடல்

C] பத்துப்பாட்டு

D] சிலப்பதிகாரம்

4) சங்க இலக்கியமானது எத்தனை ஆண்டுகள் பழமை உடையது என்று கூறப்படுகிறது?

A] ஓராயிரம் ஆண்டுகள்

B] ஈராயிரம் ஆண்டுகள்

C] நானூறு ஆண்டுகள்

D] இருநூறு ஆண்டுகள்

5) தமிழர்களின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை அறிய உதவும் நூலாக திகழும் நூல் எது?

A] புறநானூறு

B] அகநானூறு

C] குறுந்தொகை

D] நற்றிணை

6) புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பாவைகள் யாது?

A] வெண்பா மற்றும் உரிச்சீர்கள் விரவி வரும்

B] வெண்பா மற்று வஞ்சிசீர்கள் விரவி வரும்

C] ஆசிரியப்பா மற்றும் கலிப்பாக்கள் விரவி வரும்

D] ஆசிரியப்பா மற்றும் வஞ்சிசீர்கள் விரவி வரும்

7) புறநானூற்றின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

A] வீரமாமுனிவர்

B] ஜி.யு.போப்

C] பாரதியார்

D] எல்லீஸ் துரை

8) யாதும் ஊரே யாவரும் கேளிர் - என தொடங்கும் பாடலானது புறநானூற்று நூலில் எத்தனையாவது பாடலாக இடம்பெற்றுள்ளது?

A] புறம் 192

B] புறம் 189

C] புறம் 182

D] புறம் 195

9) புறநானூற்று பாடலின் அடிவரையறை யாது?

A] 3 முதல் 6 அடிகள் வரை

B] 4 முதல் 8 அடிகள் வரை

C] 4 முதல் 40 அடிகள் வரை

D] 9 முதல் 13 அடிகள் வரை

விடைகள் - புறநாநூறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | A | 4 | B | 7 | B |
| 2 | D | 5 | A | 8 | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | D | 6 | D | 9 | C |

## 10) திண்ணையை இடித்து தெருவாக்கு - தாராபாரதி:-

1) எத்தனை உயரம் இமயமலை! - அதில் இன்னொரு சிகரம் உனதுதலை! - என்ற பாடலை பாடிய புலவர் யார்?

A] தருமு.சிவராமு

B] நா.பிச்சமூர்த்தி

C] தாராபாரதி

D] வாணிதாசன்

2) கடலில் நான் ஒரு _____ என்று நீ காட்டு என புலவர் கீழ்க்கண்ட எவற்றை கூறுகிறார்?

A] முத்து

B] மீன்

C] நீர்த் துளி

D] படகு

3) தாராபாரதி எழுதிய கவிதை நூல்களில் தவறானது எது?

A] புதிய விடியல்கள்

B] இது எங்கள் கிழக்கு

C] தீக்குச்சிகள்

D] இன்னொரு சிகரம்

4) தாராபாரதியின் கவிதையில் வெளிப்பட்ட கருத்து யாது?

A] திண்ணையை இடிப்பது

B] தன்னம்பிக்கை கொள்

C] வேலைக்கு செல்வது

D] தன்னலமற்ற செயல்

5) தன்னம்பிக்கை கொள்வதின் முதல்படி யாது?

A] நம்பிக்கை கொள்வது

B] உன்னை அறிவது

C] கல்வி கற்பது

D] தன்னை அறிவது

விடைகள் - திண்ணையை இடித்து தெருவாக்கு:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | A | 3 | C | 4 | B | 5 | D |

## 11) செய்யும் தொழிலே தெய்வம் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

1) மக்கள் கவிஞர் - என்று போற்றப்படும் கவிஞர் யார்?

A] கல்யாண சுந்தரம்

B] நாராயணகவி

C] தாராபாரதி

D] மருதகாசி

2) உழைக்கும் மக்களின் துயரங்களையும், பொதுவுடைமைச் சிந்தனைகளையும் தம்முடைய பாடல்கள் மூலம் பரவலாக்கிய புலவர் யார்?

A] உடுமலை நாராயணகவி

B] புதுமைப்பித்தன்

C] பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

D] பாரதியார்

3) எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கவிதைகளை இயற்றியவர் யார்?

A] உடுமலை நாராயணகவி

B] புலமைப்பித்தன்

C] பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

D] பாரதியார்

4) கல்யாணசுந்தரம் அவர்கள் கீழ்க்கண்டவற்றில் எவையெல்லாம் விதைகளாக மாறும் என்று தன் பாடலில் குறிப்பிடுகிறார்?

A] பயிர்

B] வெயில்

C] திறமை

D] வேர்வை

5) மக்கள் கவிஞர் பிறந்த ஊர் எது?

A] செங்கற்பட்டு

B] செங்கற்படுத்தான்காடு

C] செங்கற்படுத்தான் கோட்டை

D] குவளை

6) எனது வலதுகை - என்று பட்டுக்கோட்டை கீழ்க்கண்ட யாரால் பாராட்டப்பட்டார்?

A] பாரதிதாசன்

B] உடுமலை நாராயணகவி

C] மருதகாசி

D] கண்ணதாசன்

7) ‘அவர் கோட்டை நான் பேட்டை என பேட்டை’ என வேடிக்கையாக சொன்னவர் யார்?

A] பாரதிதாசன்

B] உடுமலை நாராயணகவி

C] மருதகாசி

D] கண்ணதாசன்

8) தன் வாழ்நாள்களில் விவசாயி, மாடு மேய்ப்பவர், உப்பளத் தொழிலாளர், நாடக நடிகர், இட்லி வியாபாரி, முறுக்கு வியாபாரி என 17 வகை தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்தவர் யார்?

A] புதுமைப்பித்தன்

B] உடுமலை நாராயணகவி

C] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

D] ஈரோடு தமிழன்பன்

விடைகள் - செய்யும் தொழிலே தெய்வம்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | C | 3 | C | 4 | D | 5 | B |
| 6 | A | 7 | B | 8 | C | | | | |

## 12) தனிப்பாடல் - இராமச்சந்திர கவிராயர்:-

1) கல்லைத்தான் மண்ணைத்தான் - என தொடங்கும் தனிப்பாடலை பாடிய புலவர் யார்?

A] முடியரசன்

B] மு.மேத்தா

C] இராமச்சந்திர கவிராயர்

D] அழகிய மணவாளதாசர்

2) கீழ்க்கண்டவற்றில் யாருக்கு குமரகண்ட வலிப்பு வருவதாக இராமச்சந்திர கவிராயர் தன் பாடலில் கூறுகிறார்?

A] பணம் படைத்தவர்களுக்கு

B] தமிழை பாடி பரிசு வாங்க வருபவர்களுக்கு

C] அறிவில்லாதவர்க்கு

D] முருக கடவுளுக்கு

3) பரங்குன்றுளான் - என்று குறிப்பிடப்படும் கடவுள் யார்?

A] குன்றத்தூர் முருகன்

B] திருப்பரங்குன்றம் முருகன்

C] திருச்செந்தூர் முருகன்

D] திருத்தணி முருகன்

4) இராமச்சந்திர கவிராயர் அவர்கள் கீழ்க்கண்ட யாரை குணக்கடலே! அருட்கடலே! - என்று அழைக்கிறார்?

A] தாமரையில் உள்ள பிரமன்

B] பணம் படைத்திருக்கும் செல்வந்தர்கள்

C] திருப்பரங்குன்ற முருகன்

D] தமிழைப் பாடும் புலவர்கள்

5) தனிப்பாடல் திரட்டு என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ள பெரும்பாலான பாடல்கள் அனைத்தும் எத்தனை ஆண்டு முதல் எத்தனை ஆண்டிற்குள் பாடப்பட்டவையாக கருதப்படுகிறது?

A] 100 முதல் - 150 ஆண்டுக்குள்

B] 150 முதல் - 200 ஆண்டுக்குள்

C] 200 முதல் - 250 ஆண்டுக்குள்

D] 200 முதல் - 300 ஆண்டுக்குள்

6) துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லமை கொண்ட புலவர் யார்?

A] இராமானுஜ கவிராயர்

B] இராமச்சந்திரக் கவிராயர்

C] முடியரசன்

D] உடுமலை நாராயணகவி

7) எல்லீஸ் துரைக்கு கல்வி கற்பித்த புலவர் யார்?

A] இராமச்சந்திர கவிராயர்

B] இராமானுஜ கவிராயர்

C] தாண்டவராய முதலியார்

D] திரு.வி.க

8) இராமச்சந்திர கவிராயர் அவர்கள் சென்னை கல்விச் சங்கம் சார்பில் யாருடன் இணைந்து சதுரகராதியை வெளியிட்டார்?

A] இராமனுஜக் கவிராயர்

B] இரட்டைப்புலவர்

C] காளமேகப்புலவர்

D] தாண்டவராய முதலியார்

9) இராமச்சந்திர கவிராயர் அவர்கள் சதுரகராதியை வெளியிட்ட ஆண்டு எது?

A] 1800

B] 1820

C] 1824

D] 1813

10) நவபங்கி, சதபங்கி ஆகிய சித்திரக்கவிகள் பாடுவதில் வல்லமை கொண்ட புலவர் யார்?

A] இராமச்சந்திரக் கவிராயர்

B] இரட்டைப்புலவர்

C] காளமேகப்புலவர்

D] தாண்டவராய முதலியார்

விடைகள் - தனிப்பாடல்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 3 | B | 5 | D | 7 | A | 9 | C |
| 2 | A | 4 | C | 6 | B | 8 | D | 10 | A |

## 13) அந்தக் காலம் இந்தக் காலம் - உடுமலை நாராயணகவி

1) பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துக்களை பரப்பிய புலவர் யார்?

A] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

B] உடுமலை நாராயணகவி

C] மருதகாசி

D] கண்ணதாசன்

2) தமிழக மக்களால் பகுத்தறிவுக் கவிராயர் என்று அழைக்கப்பட்ட புலவர் யார்?

A] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

B] கி.ஜீவானந்தம்

C] நாராயணகவி

D] கண்ணதாசன்

3) நடுவணரசானது எந்த ஆண்டு நாராயணகவி அவர்களின் அஞ்சல் தலையை வெளியிட்டது?

A] 2001

B] 2006

C] 2010

D] 2008

4) உடுமலை நாராயணகவி அவர்களால் கீழ்க்கண்ட யாரால் திரை உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டார்?

A] என்.எஸ்.கலைவாணர்

B] எம்.ஜி.ராமச்சந்திரன்

C] சிவாஜி கணேசன்

D] எம்.எஸ்.விஸ்வநாதன்

5) நாட்டுப்புறப் பாடல் மெட்டுகளைத் திரைப்படத்திற்கு அறிமுகம் செய்தவர் யார்?

A] கண்ணதாசன்

B] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

C] உடுமலை நாராயணகவி

D] மருதகாசி

6) திருக்குறள் கருத்துக்களை மிகுதியாக தன் திரைப்பட பாடல்களில் புகுத்தியவர் யார்?

A] உடுமலை நாராயணகவி

B] பாபநாசம் சிவன்

C] புலமைப்பித்தன்

D] கண்ணதாசன்

விடைகள் - அந்தக்காலம் இந்தக்காலம்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | C | 3 | D | 4 | A | 5 | C |
| 6 | A | | | | | | | | |

## 14) குற்றாலக் குறவஞ்சி - திரிகூட ராசப்பக் கவிராயர்:-

1) வான்வழியே நினைத்த இடத்திற்குச் செல்லும் சித்தர்கள் கீழ்க்கண்டவாறு எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

A] கடுவெளிச் சித்தர்

B] கமனசித்தர்

C] பாம்பாட்டிச்சித்தர்

D] குதம்பைச் சித்தர்

2) மனிதனின் இறப்பை நீக்கி காக்கும் மூலிகையின் பெயர் யாது?

A] கரிசிலாங்கண்ணி

B] குப்பைமேனி

C] கனிச்சித்தி

D] காயச்சித்தி

3) வானத்தில் இருக்கும் தேவர்களைக் கண்சிமிட்டி அழைப்பவர்கள் யார் என்று குற்றால குறவஞ்சி பாடலில் திரிகூடராசப்பக் கவிராயர் கூறுகிறார்?

A] மரத்தில் உள்ள குரங்குகள்

B] மலையில் வளர்ந்து வரும் சித்தர்கள்

C] மலையில் உள்ள கானவர்கள்

D] வானத்தை தொடும் அருவியின் ஓசைகள்

4) மக்கள் தன் நாட்டில் செல்வங்களை தேடாமல் கீழ்க்கண்ட எந்த இரு பொருள்களை மட்டுமே தேடுவதாக குறத்தி கூறுகிறாள்?

A] அறம், பொருள்

B] அறம், இன்பம்

C] அறம், நிலம்

D] அறம், பெருமை

5) குறத்தி தன் நாட்டில் வாடும் பொருளாக எவற்றைக் கூறுகிறாள்?

A] நோய்

B] பெண்கள் மெல்லிடை

C] வறுமை

D] நீர் நிலைகள்

6) கீழ்க்கண்டவற்றில் தவறான இணை எது?

A] வாடக்காண்பது - யோகியோர் உள்ளம்

B] போடக்காண்பது - பூமியில் வித்து

C] வருந்தக்காண்பது - சூல் உளைச்சங்கு

D] தேடக்காண்பது - நல்லறம் கீர்த்தி

விடைகள் - குற்றாலக்குறவஞ்சி:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | B | 3 | C | 5 | B |
| 2 | D | 4 | D | 6 | A |

## 15) மரமும் பழைய குடையும் - அழகிய சொக்கநாதப் புலவர்:-

1) ‘அடைக்கலம் என்று வந்து அடைந்தவர் விரும்பியதனை அளிக்கும் மன்னாக’ - கீழ்க்கண்ட யாரை அழகிய சொக்கநாதபுலவர் குறிப்பிடுகிறார்?

A] முத்துசாமிப்பிள்ளை

B] முத்துச்சாமி தேவர்

C] முத்துச்சாமி நாவலர்

D] முத்துச்சாமித்துரை

2) அழகிய சொக்கநாத புலவர் பிறந்த ஊர் எது?

A] தச்சநல்லூர்

B] தஞ்சாவூர்

C] செங்கற்படுத்தான்காடு

D] கிள்ளியூர்

3) அழகிய சொக்கநாத புலவர் இயற்றிய தனிப்பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 20 க்கும் மேற்பட்டது

B] 20 க்கு உட்பட்டது

C] 25 க்கும் மேற்பட்டது

D] 25 க்கு உட்பட்டது

4) அழகிய சொக்கநாத புலவரின் சிறப்பு பெயர்களில் தவறானது எது?

A] திவ்வியக்கவி

B] தெய்வப்புலவர்

C] அழகிய மணவாளதாசர்

D] வணங்காமுடி

5) சொக்கநாத புலவர் இயற்றிய நூல்களில் தவறானது எது?

A] காந்தியம்மை பிள்ளைத்தமிழ்

B] திருவாரூர் குறவஞ்சி

C] கோதை கும்மி

D] காந்தியம்மை கும்மி

6) காந்தியம்மை பிள்ளைத்தமிழ் என்ற நூலை இயற்றியதற்காக அழகிய சொக்கநாத புலவருக்கு முத்துசாமி துரை வள்ளல் அவர்கள் கீழ்க்கண்ட எவற்றை அவருக்கு பரிசாக அளித்தார்?

A] வைரக்கடுக்கன்

B] தங்கமோதிரம்

C] 100 பொற்காசுகள்

D] வைரமோதிரம்

READ MORE MODEL QUESTIONS - WWW.WINMEEN.COM

விடைகள் - மரமும் பழைய குடையும்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | D | 3 | C | 5 | B |
| 2 | A | 4 | D | 6 | A |

READ MORE MODEL QUESTIONS - WWW.WINMEEN.COM

நன்றி - பழனி முருகன்